1972 ஆகஸ்ட் 25]

இளையான்குடி துணை வட்டம்

*342. வினா—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது தனி நிலை துணை வட்டமாக இயங்கி வரும் இளையான்குடியை வட்டமாக உயர்த்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் இளையான்குடி தனிநிலை துணை வட்டத்தை வட்டமாக உயர்த்துவதை குறித்து பரிசீலனை செய்து வருகிறார்.

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே, இளையாங்குடி வட்டம் ஒரு துணை வட்டமாக இருக்கிறது, அதைத் தனி வட்டமாக்கக் கோரி பல மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன. தனி வட்டமாக அதை ஆக்குவது பரிசீலனையில் இருப்பதாக என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், எப்பொழுது வரும் என்று காலம் குறித்துச் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : பரிசீலனை முடிந்த பிறகுதான் சொல்ல முடியும்.

திரு. கே. கே. முத்தையா : தலைவர் அவர்களே, துணை வட்டமாக இருப்பதைத் தனிவட்டமாக ஆக்கவேண்டுமானால் என்ன என்ன அடிப்படைத் தேவைகள் இருக்கவேண்டுமென்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி போட்டால் முழு விவரங்களும் சேகரித்துத் தரலாம்.

வீட்டு மனைகள் ஒப்படை

*343 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் செம்மினிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பிள்ளையார்பாளையத்தில் வீடு கட்டிக் குடியிருக்கும் ஏழை மக்கள், அம்மனைகளுக்கான பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், பட்டா வழங்கப்படுவதில் தாமதமேற்படுவதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.